பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு ) சட்டம் 1989-
ன் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.
முன்னிலை திரு. மு. வடிவேல்., பி.காம்., பி.எல்.,
அமர்வு நீதிபதி, திருவாரூர்.
2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 27 ம் நாள் வெள்ளிக்கிழமை,

**குற்றவியல் பல்வகை மனு எண்.40/2026**

CNR.No.TNTV16-000047-2026

வாசன், வயது 65/2026,
த/பெ. தெட்சிணாமூர்த்தி, .... மனுதாரர்/ வழக்கின் சொத்தின் உரிமையாளர்

--எதிர்--

காவல் துணை கண்காணிப்பாளர்,
மன்னார்குடி காவல் உட்கோட்டம்,
வடுவூர் காவல் நிலையம்,
குற்ற எண். 32/2026. .....எதிர்மனுதாரர்/ புகார்தாரர்

இன்று இம்மனு விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் சார்பில் வழக்கறிஞர் திரு. K. சிவசுந்தர் முன்னிலையாகியுள்ளார். எதிர்மனுதாரர் சார்பில் அரசு வழக்கறிஞர் திரு.S.மகாதேவன் முன்னிலையாகி இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**உத்தரவு**

1. இம்மனுவானது பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்கிதா பிரிவு 503 மற்றும் 497 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :-**

மனுதாரருடன் வேலை செய்யும் செங்குட்டுவன் என்பவர் மனுதாரருக்கு சொந்தமான TN50AS9275 பதிவெண் உள்ள PLATINA110 என்ற வாகனத்தை கடந்த 16.02.2026 ஆம் தேதி எடுத்துச்சென்றுள்ளார். அவர் அவ்வாறு இரு சக்கர

வாகனத்தை ஓட்டிச்செல்லும்போது எதிரி அஜய் என்பவர் மேற்படி செங்குட்டுவனை வழி மறித்து தாக்கிவிட்டு, செங்குட்டுவன் ஓட்டி சென்ற இரு சக்கர வாகனத்தை அஜய் என்பவர் எடுத்துச்சென்றுவிட்டார். இதனால் மேற்படி செங்குட்டுவன் வடுவூர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். மேற்படி புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்த போலீசார் செங்குட்டுவன் ஓட்டிச்சென்ற மனுதாரருக்கு சொந்தமான TN50AS9275- பதிவெண் உள்ள PLATINA110 என்ற இரு சக்கர வாகனத்தை கைப்பற்றி காவல் நிலைத்தில் வைத்துள்ளனர். மேற்படி வாகனம் மனுதாரருக்கு செந்தமானது என்பதால் மனுதாரரிடம் ஒப்படைக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

3. அரசு தரப்பில் இந்த வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைப்பதில் ஆட்சேபனை எதுவும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இன்றைய தினம் மனுவிசாரணையின் போது மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை ஓட்டிச்சென்ற செங்குட்டுவன் என்பவர் நீதிமன்றத்தில் ஆஜராகி மேற்படி வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைப்பதில் ஆட்சேபனை இல்லை என தெரிவித்துள்ளார். இன்றைய தினம் காவல் துறையினர் மேற்படி மனுதாரருக்கு சொந்தமானது என சொல்லப்படும் TN50AS9275- பதிவெண் உள்ள PLATINA110 வாகனத்தை நீதிமன்றத்தில் படிவம் 91ன் மூலம் ஒப்படைத்துள்ளனர். மேற்படி வாகனம் வழக்கு சொத்து எண்.19/2026 என கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. தற்போதுள்ள ஆவணங்களின் படி மேற்படி வாகனம் மனுதாரருக்கு சொந்தமானது என தெரிய வருவதால், வழக்கு விசாரணையின் போது வாகனத்தை ஆஜர் செய்ய வேண்டும் எனவும், மேற்படி வாகனத்தை எடுத்து செல்வதற்கு, மனுதாரர் மேற்படி வாகனத்திற்கு ரூ.50,000/- பிணை முறி எழுதி தரவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் மேற்படி வாகனத்தை

மனுதாரர் வசம் ஒப்படைக்கும் வகையில் இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**முடிவாக,** மேற்சொன்ன நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 27 ம் நாளாகிய இன்று அவையறியப் பகரப்பட்டது.

VADIVEL M
Digitally signed by VADIVEL M
Date: 2026.03.27 18:20:56 +0530

அமர்வு நீதிபதி,
பட்டியல் வகுப்பினர் மற்றும்
பழங்குடியினருக்கான (வன்கொடுமை தடுப்பு)
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.